[2003 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடங்களில் 2 தனியார் சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஓடிக்கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டது என்று சொன்னார்கள். அப்படியானால், அந்த விவரங்களை அவர் தெரிவிப்பாரேயானால், அதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே Point -to-Point என்ற பேருந்து இயக்கப்பட்டு வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 254, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வினா எண் 255, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

255—

ஆற்று மணல்

• 8067—திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதி, அமராவதி ஆற்றுப்படுகைகளிலிருந்து ஆற்று மணல் அனுமதியின்றிக் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

2003 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தாராபுரம் தொகுதி, அமராவதி ஆற்றுப்படுகையிலிருந்து கனிமவள ஆற்று மணல் அனுமதியின்றிக் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு திடீர் கண்காணிப்பு முதலிய தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாவட்ட ஆட்சியரின் நேரடிப் பார்வையில் ஆற்றுக்குச் செல்லும் வண்டிப்பாதையில் கற்கள் நடப்பட்டு கள்ளத்தனமாக மணல் எடுக்கச் செல்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், அமைச்சருக்கும் நன்றி. மாண்புமிகு அம்மாவிடம் போன முறை நேரில் கொடுத்ததன் காரணமாக என்னுடைய தொகுதிக்கு ரூபாய் 20 கோடியே 68 இலட்சங்களை வாரி வழங்கியுள்ளீர்கள். அதற்காக 20 கோடியே 68 இலட்சம் நன்றியைத் தங்களுடைய பாதத்தில் சமர்ப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) கூப்பிட்டக் குரலுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்ததற்குத் தகுந்த மாதிரி தான் நன்றி சொல்வீர்களா? கொஞ்சம் அதிகமாகவே சொல்லலாமே! (சிரிப்பு)

திருமதி வி. சிவகாமி: வருவேன் என்பான் கீதையிலே கண்ணன், பார்த்தவர் பார்வைக்குத் தெரிவேன் என்றான் பாரதத்தில் கண்ணன் என்று அம்மா என்னுடைய தொகுதிவாழ் மக்களுடைய குறைகளைத் தீர்க்க இந்த அருமையான திட்டத்தை வழங்கிய தங்களுக்கு என்றும் நன்றியுள்ளவளாக இருப்பேன் என்பதைக் கூறிக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் எனக்குப் பேச வாய்ப்புத் தரமாட்டார் பேரவைத் தலைவர். எனவே உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு பாலத்தை மட்டும் அம்மா அவர்களிடம் கேட்டிருக்கிறேன். இணைப்புப் பாலம். அதை மட்டும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்தப் பதிலை உரைத்த அமைச்சருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 256, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.